# ‘திராவிட மாடல்’ ஆட்சியில் தமிழ்நாட்டில் அனைத்துப் பகுதிகளிலும் சீரான வளர்ச்சி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை! முதல் பக்கத் தொடர்ச்சி

இந்தத் திட்டத்தால், பள்ளிக்குழந்தைகளின் வருகை படிப்பில் செலுத்துகின்ற கவனம் என்று எல்லாமே அதிகமானது. தொடர்ந்து, இந்தத் திட்டத்தை விரிவுப்படுத்தினோம். காலை வேலைகளில் குழந்தைகளுக்காக சமைக்கும் சுமை பல பெண்களுக்கு குறைந்தது. இதன் ரிசல்ட், சமூக முன்னேற்றக் குறியீடுகளில் எதிரொலித்தது.

**புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டம்!**

அடுத்து, தமிழ்நாட்டைப் பார்த்து ஒன்றிய அரசு கொண்டு வரப்போகும் திட்டம். அதுதான், நான் முதல்வன் திட்டம்!

## வருகிற தேர்தலில் என்.டி.ஏ.வுக்கு தோல்வி எனும் தக்க பதிலடியை தமிழ்நாடு நிச்சயம் வழங்கும்!

அதேபோல், மாணவர்களை டிராப்-அவுட்டில் இருந்து மீட்டெடுத்திருக்கும் ஒரு திட்டத்தைத் தீட்டினோம். அதுதான் 12 இலட்சம் மாணவ - மாணவியருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டம்!

அடுத்து, இரண்டரை கோடிக்கும் அதிகமான மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம்!

அதேபோல், விபத்து ஏற்பட்ட முதல் 48 மணி நேரத்தில், ட்ரீட்மெண்டுக்கான செலவை அரசே ஏற்றுக்கொள்ளும், “இன்னுயிர்க் காப்போம் - நம்மைக் காக்கும் 48”.

இப்படி, இன்னும் நிறைய திட்டங்கள் இருக்கிறது. நான் இப்போதைக்கு பெயர்களை மட்டும் சொல்கிறேன்.

**நிறைய திட்டங்களை நிறைவேற்றியுள்ளோம்!**

இல்லம் தேடிக் கல்வி, எண்ணும் எழுத்தும், இதயம் காப்போம், பாதம் காப்போம், ஊட்டச்சத்தை உறுதிசெய், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம், கலைஞர் கனவு இல்லம், கலைஞர் கைவினைத் திட்டம், வட சென்னை வளர்ச்சித் திட்டம், தோழி விடுதி, ஸ்டார்ட்-அப் தமிழ்நாடு, மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், பேராசிரியர் அன்பழகனார் பள்ளி மேம்பாட்டுத் திட்டம், பெருந்தலைவர் காமராசர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டம், அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி உதவித் தொகைத் திட்டம், வேர்களைத் தேடி, தாயுமானவர், அன்புக்கரங்கள் என்று வரிசையாக ஏராளமான திட்டங்கள் இருக்கிறது.

மக்கள்நலத் திட்டங்களுக்கு அடுத்து, உட்கட்டமைப்பை எடுத்துகொண்டால், மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம், கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை, கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம், திருச்சி பஞ்சப்பூரில், கலைஞர் ஒருங்கிணைந்த பேருந்து முனையம், கீழடி அருங்காட்சியகம், பொருநை அருங்காட்சியகம், கோவை ஜி.டி.நாயுடு மேம்பாலம், மதுரை, வீரமங்கை வேலுநாச்சியார் மேம்பாலம் உள்ளிட்ட ஏராளமான உட்கட்டமைப்புத் திட்டங்களையும் உருவாக்கியிருக்கிறோம். இதையெல்லாம் மேடைகள்தோறும் நான் சொல்லிக் கொண்டு இருக்கிறேன்.

இந்தத் திட்டங்களின் உருவான கதைகளையும், இவற்றின் வெற்றிக் கதைகளையும், உங்களைப் போன்ற ஊடகங்கள் மக்களிடம் கொண்டு சென்று சேர்க்க வேண்டும். இந்தத் திட்டங்கள் எல்லாம், உங்களால் நாட்டின் பிற பகுதிகளுக்கு சென்றடைந்து, மக்கள் பயனடைந்தால், அது தான் எனக்கு மகிழ்ச்சி! நான் அடிக்கடி சொல்வேன்... இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறு தமிழ்நாட்டிலிருந்து தான் எழுதப்பட வேண்டும்! அதேபோல், வளர்ச்சியும், தெற்கில் தமிழ்நாட்டில் தொடங்கி தான் எழுதப்பட வேண்டும்!

**வாட்ஸ் அப் யுனிவர் சிட்டியில் பொய்களைப் பரப்புகிறார்கள்!**

இந்த க்ரோத் ஹிஸ்டரியை தாங்கிக்கொள்ள முடியாதவர்கள், வாட்ஸ்அப் யூனிவர்சிட்டியில் பொய்களை எல்லாம் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். எங்களைப் பற்றி அவர்கள் சொல்லும் குற்றச்சாட்டுகள் எல்லாமே பழைய ஸ்கிரிப்ட்தான்!

அதில் முதல் குற்றச்சாட்டு, அரசியல் வாரிசு! இதற்கு நான் ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டேன். யார் வேண்டுமானாலும் அரசியலுக்கு வரலாம். ஆனால், யார் வந்தாலும், அவர்கள் மக்களுக்கு முன்னால் நின்று, அவர்கள் நம்பிக்கையைப் பெற்று ஓட்டு பெற்றால் மட்டும்தான், வெற்றி பெற முடியும். எனவே இது, எங்களை களத்தில் எதிர்க்க முடியாதவர்கள் வைக்கும் இற்றுப்போன குற்றச்சாட்டு!

அடுத்து சொல்வது என்ன? ஊழல்! இதுவரைக்கும் எங்கள் மீது வைத்த குற்றச்சாட்டுகளை யாராவது ஆதாரத்துடன் நிரூபித்திருக்கிறார்களா? கற்பனையான குற்றச்சாட்டுகளை சொல்லி, எங்கள் மீது பழி சுமத்திக் கொண்டே இருக்கிறார்கள்.

**பா.ஜ.க. கூட்டணியில் உள்ள அனைவரும் ஊழல்வாதிகள்தான்!**

நான் பா.ஜ.க.-விடம் கேட்பது என்வென்றால், உங்கள் கூட இருக்கும் எல்லோருமே ஊழல்வாதிகள்தான். அதிலும், உச்சநீதிமன்றம் வரைக்கும் சென்று ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்டவர்கள் தான் அதிமுக. நீங்கள் கூட்டணியில் இல்லாத சமயத்தில், அவர்கள் மீது எத்தனை குற்றச்சாட்டுகளை சொன்னீர்கள். இப்போது உங்கள் வாஷிங் மெஷினில் அவர்கள் எல்லாம் வெளுத்துவிட்டீர்களா? இதுதான் என்னுடைய கேள்வி.

> **நான் பா.ஜ.க.–விடம் கேட்பது என்வென்றால், உங்கள் கூட இருக்கும் எல்லோருமே ஊழல்வாதிகள்தான். அதிலும், உச்சநீதிமன்றம் வரைக்கும் சென்று ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்டவர்கள்தான் அதிமுக. நீங்கள் கூட்டணியில் இல்லாத சமயத்தில், அவர்கள் மீது எத்தனை குற்றச்சாட்டுகளை சொன்னீர்கள். இப்போது உங்கள் வாஷிங் மெஷினில் அவர்கள் எல்லாம் வெளுத்துவிட்டீர்களா? இதுதான் என்னுடைய கேள்வி.**

அடுத்து, இந்து விரோத கட்சி என்று பேசுவார்கள். ஆனால், உண்மை என்ன? இந்தியாவிலேயே, பா.ஜ.க. ஆளுகின்ற மாநிலங்களில் கூட இல்லாத அளவிற்கு, நாங்கள் ஆட்சி அமைத்து இந்த ஆயிரத்து 730 நாட்களில், நான்காயிரம் கோயில்களுக்கு குடமுழுக்கு செய்திருக்கிறோம்! உண்மையான பக்தர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள்! இப்படி, பாஜக வைத்த குற்றச்சாட்டுகளுக்கு எல்லாம் நான் ஆதாரத்தோடு பதில் சொல்லிவிட்டேன். ஆனால், அவர்களோ, நாங்கள் கேட்கின்ற எந்த கேள்விகளுக்கும் பதில் சொல்லவில்லை! இப்போது உங்கள் முன்பாகவும் கேட்கிறேன்... இந்தி திணிப்பை ஏற்காததால் கொடுக்காமல் இருக்கும் கல்வி நிதி எப்போது வரும்?

பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கு வாரி வழங்கிவிட்டு, இயற்கைப் பேரிடர்களுக்காக நாங்கள் கேட்ட நிவாரணத் தொகை கூட முறையாக தரவில்லையே ஏன்?

கோவை மற்றும் மதுரை மெட்ரோ திட்டங்களுக்கு எப்போது அனுமதி வரும்?

கீழடி அறிக்கை எப்போது வெளியே வரும்? - இப்படி ஏராளமான கேள்விகள் இருக்கிறது. இது எதற்குமே அவர்களிடம் இருந்து பதில் வராது!

**பா.ஜ.க. தமிழ்நாட்டுக்கு தொடர்ந்து செய்யும் துரோகம்!**

ஏனென்றால், இது எல்லாமே, பா.ஜ.க. தமிழ்நாட்டிற்கு செய்திருக்கக்கூடிய துரோக லிஸ்ட்! அவர்கள் ஒவ்வொரு முறை இங்கு வரும்போது, அந்த லிஸ்ட் பெரிதாகிக் கொண்டே செல்கிறது! நாங்கள் எதற்காக இவ்வளவையும் பேசுகிறோம் என்றால், நம்முடைய இந்திய நாடு ஒற்றுமையாக, வலிமையாக இருக்க வேண்டும் என்றுதான் இவ்வளவையும் சொல்கிறோம்.

நாங்கள் நாட்டின் யூனிட்டிக்காகப் பேசுகிறோம். பா.ஜ.க.வோ யூனிஃபார்மிட்டி பேசி, பாசிச அரசியல் செய்கிறது! மாநிலங்கள்தான், நாட்டின் அடித்தளம்! இந்தியா என்பது, “யூனியன் ஆஃப் ஸ்டேட்ஸ்”. இதை பா.ஜ.க. உணர்ந்து செயல்பட வேண்டும் என்றுதான் ஒன்றிய அரசு என்று நினைவுபடுத்திக் கொண்டே இருக்கிறோம். அரசியலமைப்புச் சட்டத்தையும், இந்த நாட்டில் வாழும் மக்களையும் காப்பாற்றுவதுதான் உண்மையான நாட்டுப்பற்று என்று நாங்கள் அழுத்தமாக சொல்கிறோம்!

**பா.ஜ.க. உருவாக்கியிருப்பது சுயநல துரோகக் கூட்டணி!**

N.D.A. என்கிற பெயரில், தமிழ்நாட்டில் பா.ஜ.க. உருவாக்கியிருக்கும் கூட்டணிக்கு என்று எந்தக் கொள்கையும் கிடையாது! அது, முழுக்க முழுக்க கட்டாயத்தினாலும், ஒரு சிலரின் சுயநலத்திற்காகவும் கூடியுள்ள துரோகக் கூட்டணி அது!

## பா.ஜ.க. கூட்டணி முழுக்க முழுக்க கட்டாயத்தாலும் சுயநலத்திற்காகவும் கூடியுள்ள துரோகக் கூட்டணி!

நான் கேட்கிறேன்... நீட் தேர்வு விலக்குப் பற்றி அக்கறையுடன் கேட்டிருக்கக்கூடிய எதிர்க் கட்சியினர், அவர்களின் கூட்டணிக்கு தலைமை தாங்கும் பா.ஜ.க.-விடம் அதை வலியுறுத்த ஏன் தயங்குகிறார்கள்? அஞ்சி நடுங்குகிறார்கள்?

தமிழ்நாட்டு மீது பா.ஜ.க. வலுக்கட்டாயமாக திணித்திருக்கும் திட்டங்கள் பற்றி குரல் எழுப்ப திராணியில்லாமல் இருப்பவர்கள், நெஞ்சை நிமிர்த்தி எப்படி மக்களுக்காக கேள்வி எழுப்புவார்கள்?

தமிழ்நாட்டின் தன்மானத்தைக் காப்பதற்கு எப்படி தலைநிமிர்ந்து பேசுவார்கள்? அதனால்தான், நடைபெற இருக்கின்ற தேர்தல் தமிழ்நாடு வெர்சஸ் N.D.A. என்று அழுத்தம் திருத்தமாக நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன்!

**என்.டி.ஏ. கூட்டணி துரோகங்களுக்கான அச்சாரம்!**

வழக்குகளால் மிரட்டப்பட்டு, முழுக்க முழுக்க சுயநலத்தோடு அமைக்கப்பட்டிருக்கக்கூடிய N.D.A. கூட்டணியை, அடுத்தடுத்த துரோகங்களுக்கான அச்சாரமாக தான் தமிழ்நாட்டு மக்கள் பார்க்கிறார்கள்!

நான் உறுதியாக சொல்கிறேன்... N.D.A.-வுக்கு தோல்வி எனும் தக்க பதிலடியை வரக்கூடிய தேர்தலில் தமிழ்நாடு நிச்சயம் வழங்கும்! நான் மக்களை நம்புகின்றவன்! பேரறிஞர் அண்ணா சொன்னது போல, மக்கள் கூடவே வாழ்பவன்! இன்னும் பல திட்டங்களை உருவாக்கி, இந்தியாவில் தமிழ்நாடுதான் நம்பர் ஒன் மாநிலம் என்று தொடர்ந்து பெருமையுடன் சொல்ல நான் உழைப்பேன்! அதற்காகத்தான், “உங்க கனவ சொல்லுங்க” என்று தமிழ்நாட்டு மக்கள் எல்லோருடைய குரலையும் கேட்க தொடங்கியிருக்கிறோம்.

**திராவிடமாடல் 2.0 அரசு அமையப் பாடுபடுவேன்!**

இந்த நிகழ்ச்சியிலும், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த பலரும் பேச இருக்கிறார்கள். அவர்களின் கருத்துகளையும் நான் நிச்சயம் முழுமையாக கேட்பேன். அதில் அவதூறுகளைப் புறந்தள்ளிவிட்டு, ஆக்கப்பூர்வமானதை கவனத்தில் எடுத்துகொண்டு, திராவிட மாடல் 2.0 அரசு அமைய நிச்சயம் பாடுபடுவேன் என்ற உறுதியை இந்த நிகழ்ச்சியின் மூலமாக நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த தமிழ்நாடு சம்மிட் வெற்றியடைய மீண்டும் ஒருமுறை என்னுடைய வாழ்த்துகளைச் சொல்லி விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

# சென்னை - விழுப்புரம் மண்டலத்திற்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

## ஆ.இராசா எம்.பி. - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!





சென்னை - விழுப்புரம் மண்டலத்திற்குட்பட்ட மாவட்ட கழகச் செயலாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் எதிர்வரும் 05.02.2026 வியாழக்கிழமை மாலை 04.00 மணியளவில் **செங்கல்பட்டு மாவட்டம் (மகாபலிபுரம் அருகில்) திருவிடந்தையில்** நடைபெறும்.

இக்கூட்டத்தில் சென்னை - விழுப்புரம் மண்டலத்திற்குட்பட்ட அனைத்து மாவட்ட கழகச் செயலாளர்களும் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**பொருள் :** கழகத்தலைவர் அவர்கள் தலைமையில் 11.02.2026 அன்று செங்கல்பட்டு மாவட்டம் (மகாபலிபுரம் அருகில்) திருவிடந்தையில் நடைபெற உள்ள வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் உறுப்பினர்கள் (BLA2, BLC, BDA, BYO) சந்திப்புக் கூட்டம்.

| **“அண்ணா அறிவாலயம்”** | **ஆ.இராசா எம்.பி.** | **எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்** |
|---|---|---|
| 30.01.2026 | கழக துணைப் | அமைச்சர் - செயலாளர் |
| சென்னை | பொதுச் செயலாளர் | கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க |

---

### இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர்

# பி.டி.உஷாவின் கணவர் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, பிப். 1-

**இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவரும் மாநிலங்களவை உறுப்பினருமான பி.டி.உஷா அவர்களின் கணவர் சீனிவாசன் அவர்கள் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:**

இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவரும் மாநிலங்களவை உறுப்பினருமான பி.டி. உஷா அவர்களின் கணவர் சீனிவாசன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருத்தமுற்றேன்.

தங்களின் அன்புக்குரியவரை இழந்து தவிக்கும் பி.டி.உஷா அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது இதயப்பூர்வமான இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

### அமைச்சர்கள் – நட்சத்திரப் பேச்சாளர்கள் கலந்து கொள்கின்றனர்!

# சேலம் மத்திய மாவட்டத்தில் ‘தமிழ்நாடு தலைகுனியாது’ பரப்புரை - கலந்துரையாடல் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிக்கை!



சேலம், பிப். 1-

சேலம் மத்திய மாவட்டச் செயலாளர், அமைச்சர் இரா.இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி "தமிழ்நாடு தலைகுனியாது" பரப்புரை மற்றும் கலந்துரை யாடல் கூட்டங்கள் கீழ்க் கண்ட தேதிகளில் மற்றும் இடங்களில் சேலம் மத்திய மாவட்டக் கழகத்தின் சார்பாக நடைபெற உள்ளது.

கலந்துரையாடல் கூட்டங்களில் நட்சத்திரப் பேச்சாளர்கள், அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள். எனவே கலந்துரையாடல் கூட்டங்களில் தொகுதியில் உள்ள முக்கிய பிரமுகர்கள், இளைஞர்கள், மாணவர்கள், தன்னார்வ அமைப்புகள், சமுதாய பெரியவர்கள், சங்கங்கள், தொழில் முனைவோர், கல்வியாளர்கள் உள்ளிட்டோர் சிறப்பாக கலந்துகொண்டு கோரிக்கைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை எடுத்துரைத்திட வேண்டுமெனவும், தொடர்ந்து நடைபெறும் பொதுக்கூட்டங்களில் பொதுமக்கள் திரளாக கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கண்ட அனைத்துக் கூட்டங்களிலும் மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய பேரூர், கிளைக் கழகத் தோழர்கள், கழகத்தின் அனைத்து சார்பு அணியைச் சேர்ந்த நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் கோவி.செழியன் - 2.2.2026 திங்கட்கிழமை**

பொதுமக்கள் சந்திப்பு நடைபெறும் இடம்

பொதுக்கூட்டம் நடைபெறும் இடம், தொகுதி

1. ஓமலூர் தொகுதி, சோழா கேஸ்கேட், ஓமலூர் - ஊராட்சி ஒன்றிய அலுவலகம், எதிரில், காடையாம்பட்டி.

**தயாநிதி மாறன் எம்.பி. 5.2.2026 வியாழக்கிழமை**

2. சேலம் மேற்கு ஜி.வி. என். திருமண மண்டபம், முத்து நாயக்கன்பட்டி, தொகுதி, திருவா கவுண்டனூர்.

**6.2.2026- வெள்ளிக்கிழமை**

3. சேலம் வடக்கு, சேலம் மாநகராட்சி, தில்லை நகர், தொகுதி, தொங்கும் பூங்கா

**அமைச்சர் பழனிவேல் - தியாகராஜன்**

**26.2.2026-வியாழக்கிழமை**

4. சேலம் தெற்கு தொகுதி, கொங்கு திருமண மண்டபம், தாதகாப்பட்டி, அம்மாபேட்டை

இவ்வாறு மாவட்டச் செயலாளர், அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிக்கையில் கூறியுள்ளார்.

